**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 10.02.2025</u>**

**OS.138/2018**

**வா.சா. 2 திரு. ரவிவர்மா**

**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. பிரதிவாதிகள் என்னிடம் ஏற்கனவே பெற்ற 4 லட்ச ரூபாய் கடனுக்காக தாவா ஒப்பந்த சொத்தை பொறுத்து 2014 ம் வருடம் ஒரு ஒப்பந்த பத்திரம் எழுதி பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான், பணம் கொடுத்த பிறகு அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து கொண்டோம். எந்த தேதியில் பணம் கொடுத்து எப்போது ரத்து செய்தோம் என்றால் தேதி நினைவு இல்லை, 2014 ம் வருடத்தில் பணம் கொடுத்து அடுத்த 2015 ம் வருடத்தில் பணம் கொடுத்து ரத்து செய்யப்பட்டது. நான் ஏற்கனவே பிரதிவாதிகளிடம் நான் போட்ட ஒப்பந்தம் சொத்தை கிரையம் பெறுவதற்காக போடவில்லை, கடன் கொடுத்ததற்காகத்தான் போடப்பட்டது என்றால் சரிதான்.

2. ரத்து செய்யப்பட்ட ஒப்பந்த பத்திரத்திற்காக யாரிடம் எவ்வளவு ரூபாய் பெற்றேன் என்றால் குமார், துரை ஆகியோர் ரூ,4,00,000/– கொடுத்தார்கள் வட்டி பிறகு தருவதாக சொன்னார்கள். அவர்கள் வட்டி தந்தார்களா என்றால் வட்டி தரவில்லை. வட்டி தரவில்லை என்பதற்காக இவ்வளவு ரூபாய் வட்டி இவ்வளவு காலத்திற்குள் திருப்பி தரவேண்டும் என்று நான் ஏதாவது எழுதி வாங்கினேனா என்றால் இல்லை, வாய்வழியாக தான் நிலத்தை விற்று 3 மாதத்தில் வட்டி தருவதாக சொன்னார்கள்.அதன் பின் 3 மாதத்தில் வட்டி ஏதாவது கொடுத்தார்களா என்றால் இல்லை. வட்டி கொடுக்காததற்கு அவர்கள் பெயரில் ஏதாவது சட்டபடியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

3. 2014 ம் வருடத்தில் ஏற்கனவே பிரதிவாதிகளுடன் நான் செய்த ஒப்பந்தத்திற்காக அசல் வட்டி கணக்கிட்டு ரூ.4,96,000/– கணக்கு வருகிறது என்று சொல்லி அதற்காக வேண்டிதான் எனது மாமியார் ஜெயாபெயரில் புதிதாக் தாவா ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல, அதற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை. நான் எனது மாமியார் பெயரில் ஒப்பந்தம் போடும்போது (வா.சா.ஆ.1) உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். 2014 ல் நான் ஏற்கனவே போட்ட ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்த தேதியில் தான்

எனது மாமியார் பெயரில் வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

4. நான் தான் எனது மாமியாரை கைப்பாவையாக வைத்து வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தை எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல, எனக்கும் மாமியாருக்கும் சரியான உறவுமுறை இல்லை. எனக்கும் எனது மாமியாருக்கும் சரியான உறவுமுறை இல்லை என்று சொல்வது எல்லாம் இந்த வழக்கிற்காக வேண்டி நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் 2வது சாட்சியாக நான் தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. இந்த தாவா ஒப்பந்த பத்திரம் பிரதிவாதிகள் அவர்கள் சொத்தை விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது அல்ல, நான் கொடுத்த கடனுக்கும், வட்டிக்கும் இரண்டுமடங்காக சேர்த்து எனது மாமியார் பெயரில் ரூ.9,00,000/- பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதாக பொய்யாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.4,96,000/- ம் தொகைக்கு ஏன் ரூ.9,00,000/- முன் பணமாக பெற்றதாக எழுதப்பட்டுள்ளது என பிரதிவாதிகள் கேட்டபோது பணத்தை திருப்பி கொடுக்கும்போது ரூ.4,96,000/- ம் மற்றும் அதற்காக வட்டி கொடுத்தால் போதும் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல.28.01.2014 ம் தேதியில் தாவா ஒப்பந்த சொத்தை ரூ.4,00,000/- த்திற்கு விலை பேசிய நான் அதே சொத்தை சரியாக ஒருவடத்தில் ரூ.9,50,000/- விலைபேசியதாகவும் அதற்காக ரூ.9,00,000/- முன்பணமாக கொடுத்ததாக சொல்வது எல்லாம் முற்றிலும் பொய்யான ஒன்று சரியல்ல.

6. ஒப்பந்தபத்திரம் கிரையம் செய்வதற்காக பிரதிவாதிகள் எழுதிகொடுக்கவில்லை என்றாலும், அவர்கள் ரூ.9,00,000/- முன்பணம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா ஒப்பந்த பத்திரத்திற்கு பிறகு 30.06.2015 ம் தேதியில் ஒரு சட்டஅறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் அனுப்பவில்லை எனது மாமியார் அனுப்பியுள்ளார். தாவா ஒப்பந்த பத்திரம் என்னிடம் பிரதிவாதிகள் பெற்ற கடன்பொறுப்புக்காக எழுதப்பட்டதால் தான தாவா ஒப்பந்த பத்திரத்தில் சொத்து விவரம் சரியாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. தாவா சொத்தின் மதிப்பு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் போகக்கூடியது என்றால் ஒப்பந்தம் ஏற்பட்டபோது அதன் மதிப்பு ரூ.50,00,000/- மேல்இருக்கும். எனது மாமியார் பிரதிவாதியிடம் ஒப்பந்தம் பேசும்போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். நான் போட்ட ஒப்பந்த பத்திரத்தை ரத்து

செய்வதற்காக ரூ.4,00,000/- பிரதிவாதிகள் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அது எங்கு கொடுத்தார்கள் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தார்கள். அப்போது யார் யார் இருந்தார்கள், அப்போது எனது மாமியார் இருந்தாரா என்றால் துரை, குமார் இருந்தார்கள், எனது மாமியார் அங்கு இல்லை.

8. என்னிடம் ரூ.4,00,000/- கொடுத்தபோது அந்த பணம் எப்படி வந்தது என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் எனது மாமியாரிடம் பணம் பெற்றுக்கொண்டு தான் அடுத்தநாள் வந்து என்னிடம் ரூ.4,00,000/- கொடுத்தார்கள் என்று நான் தெரிந்து கொண்டேன். எனது மாமியார் ரூ.4,00,000/- பிரதிவாதிகளுக்கு கொடுத்ததற்காக ஏதாவது எழுதி வாங்கிக்கொண்டாரா என்றால் இல்லை. பிரதிவாதிகள் ரூ.4,00,000/-தை எனது மாமியாரிடம் பெற்றபோது நான் உடன்இருந்தேனா என்றால் இல்லை, நான் எனது மாமியார் ஒப்பந்தம் பேசும்போது உடன் இருந்தேன். ஒப்பந்தம் எவ்வளவு நேரத்தில் பேசினார்கள், பிறகு எத்தனை மணிக்கு பணம் கொடுத்தார்கள் என்றால் காலை 10 மணிக்கு பேசினார்கள், பிறகு எப்பொழுது பணம் கொடுத்தார்கள் என்று நான் பார்க்கவில்லை.

9. ஒப்பந்தம் பேசும் போது நான் உடன்இருந்ததாக சொல்லியுள்ளேன் அப்போது ஏதேனும் முன்பணம் கொடுத்தார்களா என்றால் ரூ.10,001/- கொடுத்தார்கள். அந்த பத்தாயிரத்து ஒன்று கொடுத்ததற்காக எழுத்து மூலமாக ஏதாவது எழுதிவாங்கப்பட்டதா என்றால் இல்லை. மாமியாரிடம் பிரதிவாதிகள் ஒப்பந்தம் பேசியபோது எனக்கே ரூ.4,00,000/- மற்றும் வட்டி பிரதிவாதிகள் கடன் கொடுக்கவேண்டும் அதற்காக ஒப்பந்தம் செய்துள்ளேன் என்ற விவரத்தையும், அது ரத்து செய்யாமல் புதிதாக ஒப்பந்தம் போடவேண்டாம், முன்பணம் ஏதும் கொடுக்க வேண்டாம் என்று எனது மாமியாரிடம் சொன்னேனா என்றால் இல்லை.

10. தொகை ஏதுவும் பரிமாற்றம் இல்லாமல் எனக்கு பிரதிவாதிகள் கொடுக்கவேண்டிய கடன் மற்றும் வட்டிக்காக அதிகப்படியான தொகைக்கு எனது மாமியார் பெயரில் ஒரு ஒப்பந்தப்பத்திரம் வா.சா.ஆ.1 எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 23.07.2015 ம் தேதியில் வாதி, எனது மாமியாரும் சேர்ந்து பிரதிவாதிகள் ரூ.9,00,000/- பெற்றுக்கொண்டு அந்த ஒப்பந்தபத்திரத்தை ரத்து செய்து ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது வேறு நிலத்திற்கு. எனது மாமியார் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் போடுவார் என்றால் சரிதான், ஆனால் அவர் பெரியஅளவிற்கு படிக்கவில்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன்.

11. ஒரு ஆவணம் என்றால் அதில் எழுதப்பட்டுள்ள விவரத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்வது வழக்கம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் **பி.வா.சா.ஆ.2ல் 2வதுதாக உள்ள சாட்சி கையெழுத்து** என்னுடையது தான் என்றால் சரிதான், **அந்த கையெழுத்து மட்டும் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆனால் அந்த ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்யப்படவில்லை, ஆனால் அதனை துரையும், குமாரும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள், பணமும் கொடுக்கவில்லை.

12. ரூ.9,00,000/- பெற்றுக்கொண்டு தான் அதில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளது என்று அறிந்து நானும், எனது மாமியாரும் அதில் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, பணம் கொடுக்கிறேன் என்று சொன்னதால் நம்பிக்கையின் பேரில் கையொப்பம் செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.2ல் 2வது பக்கத்தில் ரூ.9,50,000/- க்கு விலை பேசி அட்வான்ஸாக ரூ.9,00,000/- பெற்றுக்கொண்டதாக ஒரு விக்கிரைய உடன்படிக்கை பத்திரம் எழுதி அப்பத்திரம் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1வது புத்தகம் 2015 ம் ஆண்டில் 207 எண்ணாக பதிவு செய்து கொண்டுள்ளோம், பின்னிட்டு நம் இருசாரருடைய குடும்ப சூழ்நிலை காரணமாக உடன்படிக்கையின்படி கிரையத்தை பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் போய்விட்து எனவே அந்த உடன்படிக்கை இனி அமலில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை, எனவே அமலுக்கு வராத மேற்படி உடன்படிக்கை ஆவண எண். 207/2015 ல் கண்ட சங்கதிகள் அமலுக்கு வர தேவையில்லை இந்த படிக்கு நம் சம்மதியில் எழுதிக்கொண்ட விக்கிரைய உடன்படிக்கை ரத்து ஆவணம் சரி என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த சொத்தின் மதிப்பு ரூ.50,00,000/- அரசாங்க மதிப்பு போகக்கூடியது அதனால் கிரையம் செய்தால் ரூ.5,00,000/- செலவாகும், எனது மாமியார் அந்த ரூ.5,00,000/- செலுத்தி கிரையம் செய்து கொள்ளமுடியாது என்று பின்வாங்கி விட்டார், பின்னர் அந்த பணத்தை பிரதிவாதிகள் கொடுப்பதாக சொன்னார்கள், மேலும் அவர்கள் அரசாங்க மதிப்பை மாற்றி கொடுப்பதாக சொன்னார்கள் அதனால் கிரையம் செய்து கொள்ளாமல் போய்விட்டது.

13. பி.சா.ஆ.2 ஐ பதிவு செய்து கொடுக்க சொல்லி எனது மாமியாரிடம் பிரதிவாதிகள் கேட்டபோது நானும் எனது மாமியாரும் மேலும் ரூ.50,000/- கொடுத்தால் தான் பதிவு செய்து கொடுப்போம் என்று சொல்லி பிரதிவாதிகள், ரூ.50,000/- கொடுக்காததால் பத்திரப்பதிவு அலுவலகத்மதில் இருந்து நானும்

எனது மாமியாரும் சென்று விட்டோம் என்றால் சரியல்ல, எந்த பணமும் பிரதிவாதிகள் கொடுக்கவில்லை. எந்த பணமும் கொடுக்காமல் பிரதிவாதிகள் ஒப்பந்த ரத்து பத்திரத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டு அந்த பத்திரத்தையும் எடுத்து'கொண்டு சென்று விட்டார்கள் என்று காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது நானோ, எனது மாமியாரோ புகார் ஏதாவது கொடுத்தோமா என்றால் இல்லை. பின்னிட்டு வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது, கொடுத்திருப்பார்கள்.

14. பணம் கொடுக்காமல் ரத்து பத்திரம் தயாரித்து கையொப்பம் செய்த பிறகு, அவர்கள் சென்று விட்டார்கள் என்று கூறும்போது மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் 10 நபர்களை வைத்து பேசினோம், பிரதிவாதிகள் அதற்காக எழுதியும் கொடுத்துள்ளார்கள். யார்பெயருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் ஜெயா பெயருக்கு எழுதிகொடுத்தார்கள். அந்த 10 பேர் யார் என்றால் நான், செந்தில், மற்றொரு ரவி, துரை, குமார், கோபால் ஆகியோர். எங்கு வைத்து கேட்டோம் என்றால் கோபால் வீட்டில் வைத்து கேட்டோம். அதற்காக பிரதிவாதிகள் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அதை யார் எழுதியது என்றால் கோபால் தான் எழுதினார்.

15. ஒப்பந்தப்பத்திரம் ரத்து செய்யப்பட்டு எழுதப்பட்ட பிறகு எவ்வளவு நாள் கழித்து அவ்வாறு நாங்கள் 10 பேரை வைத்து பேசி எழுதி வாங்கினோம் என்றால் சுமார் 6 மாதங்கள் கழித்து பேசி எழுதி வாங்கினோம். முத்திரைத்தாளில் எழுதி வாங்கப்பட்டதா என்றால் இல்லை, சாதா பச்சை பேப்பரில் எழுதி வாங்கப்பட்டது. நாங்கள் வற்புறுத்தி ரத்து ஒப்பந்தபத்திரத்தை திரும்ப ஒப்படைக்குமாறு பிரதிவாதிகளிடம் கேட்டோமா என்றால் அவ்வாறு கேட்கவில்லை. அவ்வாறு எழுதப்பட்டதாக சொல்லும் பத்திரம் தற்போது யாரிடம் உள்ளது என்றால் எனது மாமியாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டு, அதனை நான் பெற்று வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் சொன்னதுபோல எந்தவிதமான ஆவணமும் எழுதவில்லை, நான் வழக்கறிஞரிடம் கொடுத்ததாக சொல்வது பொய்யானது உண்மையில் அப்படி ஒரு ஆவணம் இருந்தால் அதனை தாவாவில் சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல.

16. ஒப்பந்த ரத்துப்பத்திரம் எழுதப்பட்டதில் இருந்து 6 மாதம் கழித்து பிரதிவாதிகளிடம் ஒரு ஆவணம் எழுதி வாங்கப்பட்டது என்று சொல்லும்போது அந்த சங்கதியை 25.06.2018 ம் தேதியில் இந்த தாவாவை

தாக்கல் செய்தபோது தாவா பிராதில் தெரிவித்திருப்போம் என்றால் பிரதிவாதிகள் சம்மதித்ததால் அவர்கள் எழுதி கொடுத்ததை பெரிதாக எழுத்துக்கொண்டு அதனை சொல்லவில்லை. நான் சொன்னது போல பிரதிவாதிகள் எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை, அவ்வாறு எழுதிக்கொடுத்திருந்தால் அதனை தாவா பிராதில் சொல்லியிருப்போம், தற்போது புதிய சங்கதிகளை வழக்கிற்காக வேண்டி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

17. வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும், பிரதிவாதிகளிடம் ரூ.9,00,000/- பெற்றுக்கொண்டதால், ஏற்கனவே 23.07.2015 ம் தேதியில் எழுதிக் கொடுத்துள்ள கிரைய ஒப்பந்த ரத்து ஆவணம் பதிவு செய்து கொடுக்க எனது மாமியார் கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் பெற்ற ரூ.9,00,000/- ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதனால்அதிகப்படியான செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் இரண்டரை ஆண்டுகளாக எந்த சட்டநடவடிக்கையும் எடுக்காமல் தாவா எனது மாமியார் மூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமியார் தாவாகிரைய ஒப்பந்த பத்திரத்தை அனுசரித்து கிரையம் செய்து கொள்ள எப்போதும் தயாராக இல்லை, தற்போதும் எனது மாமியார் தயாராக இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்தப்பத்திரத்தில் கண்டுள்ள மீதி கிரைய தொகையையும் நீதிமன்றத்தில் எனது மாமியார் வைப்பீடு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வாதி எனது மாமியார் என்பதால் இந்த நீதிமன்றத்தில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-R.Vijayan,
Sub Judge, Harur